



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் 35 உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.என். செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, 19.08.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பிரச்சார வாகனம் மற்றும் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த குடிநீரின் தரத்தினை பரிசோதனையை செய்யும் அரங்கினையும் பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, சேர்மன் துரைராஜ், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் எஸ்.எழிலரசன், நிர்வாகப் பொறியாளர்கள் எஸ்.நாகஆனந்த், த.பன்னீர் செல்வம், திருமதி.மா.உமா உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உயர் பதவிகளில் நேரடி நியமனத்தை ஒன்றிய அரசு ரத்து செய்திருப்பது

# சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி - குரல் கொடுத்த முதல்வருக்கு நன்றி!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. அறிக்கை!



சென்னை, ஆக.22-

இட ஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு முறையாக உயர் பதவிகளில் நேரடி நியமனத்தை ஒன்றிய அரசு கடைப்பிடித்ததை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடுமையாக எதிர்த்ததைத் தொடர்ந்து அந்த ஆட்சேர்ப்பு ஒன்றிய அரசு ரத்துச் செய்திருப்பது சமூக நீதிக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி எனவும், இட ஒதுக்கீட்டை எப்போதும் பாதுகாக்கும் முதல்வருக்கு தாம் கடமைப்பட்டிருப்பதாகவும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வு வாரியமானது ( UPSC ) ஆகஸ்ட் 17, 2024 அன்று, 45 இணைச் செயலாளர் மற்றும் இயக்குநர்/துணைச் செயலாளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டது.

எங்களது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், இடஒதுக்கீடு தொடர்பான அரசியலமைப்பு உத்தரவாதத்திற்கு முரணான யு.பி.எஸ்.சி. யின் அந்த அறிவிக்கையை நான் கடுமையாக எதிர்த்தேன்.

**பிரதமரிடம் நான் எழுப்பியிருந்த கேள்வி!**

இந்த சட்டவிரோதமான, இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு செயல்முறையை தொடரப் போகிறீர்களா அல்லது அரசியல் சட்ட இடஒதுக்கீட்டு முறையை செயல்படுத்தி புதிய நியமனத்திற்கு அழைப்பு விடுக்கப் போகிறீர்களா? என்று பிரதமர் அவர்களிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

ஒன்றிய அரசின் லேட்டரல் என்ட்ரி நடைமுறையானது தகுதியான எஸ்சி, எஸ்டி, ஓபிசி, மற்றும் சிறுபான்மை அதிகாரிகளின் உயர் வாய்ப்புகளை பறிப்பதன் மூலம் சமூக நீதியை நேரடியாக குழிதோண்டிப் புதைப்பதாக, நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தனது எக்ஸ் தள பதிவின் வாயிலாக தனது கவலையை தெரிவித்திருந்தார்.

மேலும், இந்த நடைமுறையை ஒன்றிய அரசு நிறுத்த வேண்டும் என்றும், கிரீமிலேயர் முறையை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் கூறியிருந்தார்.

இத்தகைய எதிர்ப்பினைத் தொடர்ந்து, ஒன்றிய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் இந்த அறிவிக்கைகளைத் திரும்பப் பெறக் கோரி ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆனால், இந்த பிரச்சனை இத்துடன் முடிந்துவிடவில்லை. இடஒதுக்கீடு இல்லாமல் ஒன்றிய அரசில் ஏதேனும் பதவிகள் இருக்க முடியுமா? என்றால் அதற்கு இல்லை என்பதே பதிலாகும். எனவே, இது சமூக நீதிக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

**சமூக நீதியை எந்நாளும் காத்திடும் நமது முதல்வர்!**

சமூக நீதிக்கு குந்தகம் விளையும் போதெல்லாம், அதற்காக குரல் கொடுத்து இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க அயராது உழைத்து வரும் எங்களது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் கட்டப்பட்டு வரும்

# அடுக்குமாடிக் குடியிருப்புகள் : அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகளையும் ஆய்வு செய்தார்!

சென்னை,ஆக.22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.8.2024) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் நாவலர் நெடுஞ்செழியன் நகர் (ம) சிந்தாதிரிப்பேட்டை, கொய்யாத்தோப்பு ஆகிய திட்டப்பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளையும் மற்றும் பம்பிங் ஸ்டேஷன் சாலை திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் நகர் (ம) சிந்தாதிரிப்பேட்டை திட்டப்பகுதியில் ரூ.76.87 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 450 அடுக்குமாடி குடியிருப்புகளும் மற்றும் கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 324 அடுக்குமாடி குடியிருப்புகளும், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து பம்பிங் ஸ்டேஷன் சாலை திட்டப்பகுதியில் அப்பகுதியில் வாழும் மக்களுக்காக ரூ.75 கோடி மதிப்பீட்டில் சுமார் 400 அடுக்குமாடி குடியிருப்புகள் அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டார்.

முன்னதாக சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நடைபெற்று வரும் அடுக்குமாடி குடியிருப்பு பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் நடத்தினார்.

இந்த ஆய்வு நிகழ்ச்சியில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் மதன்மோகன், தலைமை பொறியாளர் சு.லால் பகதூர், மேற்பார்வை பொறியாளர் (பொ) இளம்பரிதி, நிர்வாகப் பொறியாளர் வாஞ்சிநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம்,

# பெத்தாம்பாளையம் எல்.பி.பி வாய்க்காலில் தண்ணீர் கசிவு!

## அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று ஆய்வு!

ஈரோடு, ஆக. 22-

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் உள்வட்டம், நல்லாம்பட்டி கிராமம் செந்தாம்பாளையம் குளம், ஒட்டங்காடு பகுதியில் கரையை ஒட்டியுள்ள எல்.பி.பி வாய்க்காலில் தண்ணீர் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, 20.08.2024 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, தண்ணீர் கசிவு ஏற்படுவதை விரைந்து சரிசெய்யுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டம், எல்.பி.பி. வாய்க்காலில் கடந்த 15ம் நாளன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. முறையாக எப்போதும் ஆகஸ்ட் 15 அன்று தண்ணீர் திறந்து விடப்படுவது ஒரு நடவடிக்கையாக உள்ளது. எல்.பி.பி. வாய்க்காலில் உள்ள அனைத்து இடங்களிலும் நடைபெற்ற பராமரிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இந்த வாய்க்காலை பொறுத்தவரை மிகவும் பழமையானதாகும். இதன் காரணமாக சிறிது கசிவு ஏற்பட்டுள்ளது. வாய்க்காலில் எப்பொழுதும் சிறிது தண்ணீர் வந்து கொண்டே இருக்கும். எனவே, முழுமையாக தண்ணீர் இல்லாமல் இருந்தால் தான் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலும். எனவே, இந்த வாய்க்காலில் அடுத்த ஆண்டு பராமரிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாய்க்காலில் ஏற்பட்டுள்ள தண்ணீர் கசிவு தொடர்பாக, நேற்று முன்தினம் (20.08.2024) சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தண்ணீர் கசிவினை தடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ள, ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. மேலும் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள தண்ணீர் கசிவு குறித்த காரணத்தினை முழுமையாக ஆய்வு மேற்கொண்டு, இன்னும்

இருதினங்களுக்குள் கசிவினை சரிசெய்து தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த போகத்திற்கான தண்ணீரினை திறந்து விடுவதில் எவ்வித தடையும் இருக்க கூடாது. எனவே அடுத்த போகத்திற்கான தண்ணீர் திறந்து விடும் பொழுது, முறையாக திட்டமிட்டு, அதற்கான நிரந்தர தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் முருகேசன் (கோவை மண்டலம்), கண்காணிப்பு பொறியாளர் கோபி (நீர்வளத்துறை, ஈரோடு), செயற்பொறியாளர் திருமூர்த்தி உட்பட தொடர்புடைய துறை உயர் அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தி.மு.க. அயலக அணி

# அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) - எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய அயல்நாடுகளின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA), எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய அயல்நாடுகளின் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் (கிழக்கு) (U.S.A. East)**

**அமைப்பாளர்** **'நியூ ஜெர்சி' பாலா** நியூஜெர்சி, யூ.எஸ்.ஏ.

**துணை அமைப்பாளர்கள்** 1.இளமாறன், 2.தீபா, 3.ரவி பெருமாள், 4. கோசல், 5.ரியாஸ், 6.தர்மராஜ், 7. கோபி கதிர்வேல்,

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் (மேற்கு) (U.S.A. West)**

**அமைப்பாளர்** **சக்திவேல் ராமசாமி,**

**துணை அமைப்பாளர்கள்** 1.ஆதித்யா, 2.ரோகிணி, 3.செல்வா, 4.சுப்பு, 5.பிரேம், 6.ஜான் பிரிட்டோ, 7. நைனார் முஹம்மது, 8.கார்த்திக் பிரபாநந்தன்,

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் (மத்திய) (U.S.A. Central)**

**அமைப்பாளர்** **'வாஷிங்டன்' சிவா,** வாஷிங்டன்,

**துணை அமைப்பாளர்கள்** 1.ம.வீ.கனிமொழி, 2. பிரபு சிவகுருநாதன், 3. உதய் பொய்யாமொழி, 4.பூவண்ணன், 5.ஆண்டனி, 6. பிரபு சிவகுருநாதன் 7.பெப்பின், 8.கார்த்தி சந்திரசேகரன்

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் (வடக்கு) (U.S.A. North)**

**அமைப்பாளர்** **'விஸ்கான்சின்' சிவகுமார்,** விஸ்கான்சின்,

**துணை அமைப்பாளர்கள்** 1.கோபிநாத், 2.ஜெயகாந்த், 3.ராஜ் சந்தானம், 4.ராஜன், 5.கல்பனா சுரேன், 6.விஜய் சாந்தலிங்கம், 7. பிரிட்டோ ஜான்,

**அமெரிக்க ஐக்கிய நாடுகள் (தெற்கு) (U.S.A. South)**

**அமைப்பாளர்** **பாண்டிமதி,**

**துணை அமைப்பாளர்கள்** 1.அரவிந்த், 2.பொய்யாமொழி, 3.முத்துச்செல்வி, 4.ஆனந்த், 5.ராம்குமார், 6.சரவணகுமார், 7.பிரபு,

**எத்தியோப்பியா (Ethiopia)**

**அமைப்பாளர்** **டாக்டர் கிருஷ்ணராஜ் ராமசாமி,** எத்தியோப்பியா.

**துணை அமைப்பாளர்கள்** 1.டாக்டர் ஜான்சன் சந்தோஷ், 2.டாக்டர் சுப்பிரமணி, 3. டாக்டர் மகேந்திரன், 4.டாக்டர் தில்லை அரசு, 5. டாக்டர் இளங்கோ, 6. எம்.அருண்தீப், 7.ஜி. தண்டபாணி.

**ருவாண்டா (Rwanda)**

**அமைப்பாளர்** **எம்.பி. ரியாஸ்,** ருவாண்டா.

**துணை அமைப்பாளர்கள்** 1. ஆ.கருணாகரன், 2எம்.ஏ. பைசல்அன்வர், 3.மா.ராமதாஸ்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 20.08.2024

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

# தேனி மாவட்டத்தில் தொடர் கனமழை!

## வைகையின் துணை ஆறுகளில் வெள்ளப் பெருக்கு!

போடி, ஆக.22-

தேனி மாவட்டத்தில் அடுத்தடுத்து பெய்து வரும் கனமழையினால் வைகையின் துணை ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த மாதம் தொடக்கத்தில் வெயிலின் தாக்கம் இருந்தது. அதன் பின்பு சில வாரங்களாகவே அடுத்தடுத்து கனமழை பெய்து வருகிறது. கனமழைக்குப் பின் சில நாட்கள் மழை நிற்பதும், பின்பு மீண்டும் சில நாட்களுக்குப்பின் மழை தொடர்வதுமாக உள்ளது. இதனால் மாவட்டத்தில் தற்போது இதமான குளிர் பருவமழை நீடித்து வருகிறது. நேற்று ஆண்டிபட்டியில் அதிகட்சமாக 79.5 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் சராசரி மழையளவாக 148 மி/மீ. மழை பதிவாகி உள்ளது. இந்நிலையில், நேற்று (செவ்வாய்) மதியம் மீண்டும் மழை தொடங்கியது. இதில் சோத்துப்பாறையில் 40 மி.மீ. வருசநாடு பகுதியில் 60 மி.மீ மழை பெய்துள்ளது.

அடுத்தடுத்த மழையினால் சில நாட்களுக்கு முன்பு நீர்வரத்து இன்றி இருந்த மூலவைகையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. போடி அருகே குரங்கணி மலைப் பகுதியில் பெய்த மழையினால் கொட்டக்குடி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதேபோல் மூலவைகையில் துணை ஆறுகளான பாம்பாறு, வராகநதி, சுருளி ஆறு உள்ளிட்ட பல ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த 11ம் தேதி 57.78 அடியாக இருந்த நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து இன்று 64.5 அடியாக உயர்ந்தது. இதேபோல் மாவட்டத்தில் உள்ள மஞ்சளாறு, சோத்துப்பாறை, சண்முகாநதி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது.



உதகை – நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோத்தகிரி கீழ்கோத்தகிரி ஒன்றியங்களில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். கீழ் கோத்தகிரி ஒன்றியத்துக்குட்பட்ட சோலூர் மட்டம், கைகாட்டி அரவேணு ஆகிய பகுதியில் பொதுமக்களை சந்தித்து நன்றி கூறினார். சுற்றுலாத்துறை அமைச்சர் க.ராமச்சந்திரன், மாவட்டக் கழக செயலாளர் பா.மு. முபாரக், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ் குமார், கோத்தகிரி ஒன்றிய செயலாளர் கண்ணன், கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.